## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI

| | | |
|---|---|---|
| Summary Trial Case : | | CC 127/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | அ.சா. 1 |
| Name | : | சுரேஷ் |
| Father's/Husband Name | : | அயல்ராஜ் |
| Village | : | பெரம்பலூர் காவல் நிலைய முதல்நிலை காவலர் |
| Taluk | : | பெரம்பலூர் |
| Age | : | 31/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 24.03.2026.

**சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது**

**( எதிரிகள் ஆஜர் )**

**முதல் விசாரணை**

நான் தற்போது பெரம்பலூர் காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 06.04.2025 ம் தேதி அன்று வி.களத்தூர் காவல் நிலையத்தில் பணியில் இருந்தேன் அன்றைய தினம் உதவி ஆய்வாளர் அசோகன் தலைமை காவலர் சுரேஷ்குமார் ஆகியோர்களுடன் நானும் மதுவிலக்கு தடுப்பு சம்மந்தமாக மேட்டுபாளையம் பகுதிகளில் ரெய்டு சென்றுக்கொண்டிருந்போது உதவி ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி எதிரி முத்தம்மாள் வீட்டின் உள்ளே சென்று சோதனை செய்தபோது வீட்டினுள் 180 m.l. அளவுள்ள Block pearl பிராந்தி 26 மதுபாட்டில்கள் இருந்தது. அரசு மதுபான கடை மூடிய பிறகு அதிக விலைக்கு விற்பதற்காக வாங்கி வைத்திருப்பதை அறிந்து எதிரியின் வீட்டிலிருந்து மேற்படி வழக்கு சொத்துகளை கைபற்றுதல் மகஜரில் கைபற்றியும் பின்னர் அந்த

வழக்கு சொத்துகளை திறந்து கொட்டி அழித்தல் மகஜரும் தயார் செய்யப்பட்டது. மேற்கண்ட கைபற்றுதல் மகஜர் மற்றும் அழித்தல் மகஜர் முறையே **அ.சா.ஆ.1 அ.சா.ஆ. 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எதிரியின் மீது காவல் நிலைய குற்ற எண். 44/2025 சட்டப்பிரிவு 4(1)(C) TNP Amendment Act 2024 ன்படி உதவி ஆய்வாளரால் பதிவு செய்யப்பட்டது. உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

மேற்கண்ட பணியின் போது பெண்காவலர்களை உதவிக்கு அழைத்து சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் பொதுமக்கள் நடமாடும் இடம் என்று சொன்னால் சரிதான். பொது நபர்களை இந்த வழக்கில் ஒரு சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடம் குறித்து பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்கண்ட போலிசார் சம்பவ தினத்தன்று பணியில் இருந்தது குறித்து பொது நாட்குறிப்பு ஆவணங்கள் எதையும் இந்த வழக்கில் ஒரு பகுதியாக இணைக்கப்படவில்லை என்றால் சரிதான். புள்ளி விபரக்கணக்கிற்காக எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் அரசு மதுபான பாட்டில்கள் எந்த கடையில் இருந்து பெறப்பட்டது என்பது குறித்து விசாரித்து அந்த கடையில் பணி செய்யும் பணியாளரை ஒரு தரப்பு சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். பொதுவாக ஒரு நபருக்கு கூடுதலாக பல மதுபான பாட்டில்கள் விலைக்கு வழங்கப்படும் என்றால் சரிதான். வெளி சந்தையில் எளிதாக கிடைக்கும் பொருட்களை புள்ளி விபர கணக்கிற்காக எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over to the Witness and admitted by the Witness to be correct

District Munsif
– Cum-
Judicial Magistrate

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI

| | | |
|---|---|---|
| Summary Trial Case : | | CC 127/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | அ.சா. 2 |
| Name | : | அசோகன் |
| Father's/Husband Name | : | முத்து |
| Village | : | மங்களமேடு காவல் நிலைய உதவி ஆய்வாளர் |
| Taluk | : | வேப்பந்தட்டை |
| Age | : | 57/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 24.03.2026.

**சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது**

**( எதிரிகள் ஆஜர் )**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மங்களமேடு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 06.04.2025 ம் தேதி அன்று வி.களத்தூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தேன் அன்றைய தினம் நானும் இரண்டாம் நிலை காவலர் சுரேஷ் ஆகியோர்களுடன் மதுவிலக்கு தடுப்பு சம்மந்தமாக மேட்டுபாளையம் பகுதிகளில் ரெய்டு சென்றுக்கொண்டிருந்போது எனக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி எதிரி முத்தம்மாள் வீட்டின் உள்ளே சென்று சோதனை செய்தபோது வீட்டினுள் 180 m.l. அளவுள்ள Block pearl பிராந்தி 26 மதுபாட்டில்கள் இருந்தது. அரசு மதுபான கடை மூடிய பிறகு அதிக விலைக்கு விற்பதற்காக வாங்கி வைத்திருப்பதை அறிந்து எதிரியின் வீட்டிலிருந்து மேற்படி வழக்கு சொத்துகளை கைபற்றுதல் மகஜரில் கைபற்றியும் பின்னர் அந்த வழக்கு சொத்துகளை திறந்து கொட்டி அழித்தல் மகஜரும் தயார் செய்தேன். பின்னர் எதிரியின் மீது காவல் நிலைய குற்ற எண்.

44/2025 சட்டப்பிரிவு 4(1)(C) TNP Amendment Act 2024 ன்படி என்னால் பதிவு செய்யப்பட்டது. அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்து பிரிவு 4(1)(C) TNP Amendment Act 2024 குற்றம் என கடந்த 07.04.2025 ம் தேதி அன்று குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

மேற்கண்ட பணியின் போது பெண்காவலர்களை உதவிக்கு அழைத்து சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் பொதுமக்கள் நடமாடும் இடம் என்று சொன்னால் சரிதான். பொது நபர்களை இந்த வழக்கில் ஒரு சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடம் குறித்து பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்கண்ட போலிசார் சம்பவ தினத்தன்று பணியில் இருந்தது குறித்து பொது நாட்குறிப்பு ஆவணங்கள் எதையும் இந்த வழக்கில் ஒரு பகுதியாக இணைக்கப்படவில்லை என்றால் சரிதான். புள்ளி விபரக்கணக்கிற்காக எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் அரசு மதுபான பாட்டில்கள் எந்த கடையில் இருந்து பெறப்பட்டது என்பது குறித்து விசாரித்து அந்த கடையில் பணி செய்யும் பணியாளரை ஒரு தரப்பு சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். கைபற்றுதல் மகஜரிலும் அழித்தல் மகஜரிலும் சட்டப்பிரிவு போடவில்லை என்றால் சரிதான். பொதுவாக ஒரு நபருக்கு கூடுதலாக பல மதுபான பாட்டில்கள் விலைக்கு வழங்கப்படும் என்றால் சரிதான். வெளி சந்ததையில் எளிதாக கிடைக்கும் பொருட்களை புள்ளி விபர கணக்கிற்காக எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over to the Witness and admitted by the Witness to be correct

District Munsif
– Cum-
Judicial Magistrate